பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 25 வியாழக்கிழமை 07.04.2022 கதிர் 22

## தந்தை, தாய், மகள் என மூவர் ஒரே விபத்தில் சாவு

தனமல்வில பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ – கப் வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் மகள் என மூவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

விபத்து தொடர்பில் தனமல்வில

2

# ‘கோட்டா வீட்டுக்குப் போ’! என்ற கோஷத்துடன் தலவாக்கலையில் திரண்டது மக்கள் வெள்ளம்







‘கோட்டா வீட்டுக்குப் போ’ என்ற கோஷத்தோடு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் எதிர்ப்புப் பேரணி தலவாக்கலை நகரில் இன்று நடைபெற்றது.

எதிர்ப்புக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக பூண்டுலோயா வழியாகவும், நுவரெலியா வழியாகவும், ஹற்றன் வழியாகவும் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்களுடைய எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் தலவாக்கலை நகரை வந்தடைந்தனர்.

அங்கு பிரதான சுற்று வட்டத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்து முற்றாகத்

2

# சர்வதிகாரியான கோட்டாவை விரட்டும் வரை ஓயமாட்டோம்!

## தலவாக்கலை ஆர்ப்பாட்டத்தில் திகா சூளுரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவந்தவர்கள் கூட ‘கோட்டா வீட்டுக்குப் போ’ என இன்று கோஷம் எழுப்புகின்றனர். எனவே, அராஜக ஆட்சியை முன்னெடுக்காமல் சர்வதிகாரியான ஜனாதிபதி கோட்டாபய உடன் பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.

2

## குறிகட்டுவானில் படகு கவிழ்ந்தது எனினும் பயணிகள் மீட்கப்பட்டனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.07

குறிகட்டுவான் – நயினாதீவு இடையேயான பயணிகள் போக்குவரத்துப் படகு கவிழ்ந்தபோதும் தெய்வாதீனமாக பயணிகள் உயிர் தப்பினர்.

குறிகட்டுவானில் இருந்து நயினாதீவிற்கு செல்ல நேற்று மாலை 6.30 மணியளவில் பயணிகளை ஏற்றிய படகே இவ்வாறு கவிழ்ந்து அனர்த்தம் ஏற்பட்டது.

நயினாதீவிற்கான இறுதிப் படகு என்பதனால் கட்டுப்பாட்டை மீறி – அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை

2

## சனி முதல் 9 நாள்கள் தொடர்ந்து விடுமுறை

எதிர்வரும் திங்கட்கிழமை (ஏப்ரல் 11) மற்றும் செவ்வாய்கிழமை (ஏப்ரல் 12) பொது விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே 13,14,15,16,17 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அறிவிக் கப்பட்டிருந்தன. அதன்படி, நாளை மறுதினம் 9 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை 9 நாள்கள் தொடர் விடுமுறை நாள்களாக அமையப் போகின்றன.

## பொருளாதார நெருக்கடிகளுக்கு தமிழர் விரோத யுத்தமே காரணம்!

### விவரிக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு நாட்டை ஆட்சி செய்தவர்களின் தவறான சிந்தனையும், ஆக்கபூர்வ திட்டங்கள் இன்றி தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டதுமே காரணமாகும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் இன்றைய நிலை குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை இன்று

2

## 12 தமிழக மீனவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு தலா 2 கோடி ரூபா ரொக்கம் விதித்த நீதிமன்றம்!

### கிளிநொச்சி நீதிவான் இஸ்மாத் ஜமீல் கட்டளை

(ந.லோகதயாளன்)

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்கள் இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்கள் ஒவ்வொருவரையும் தலா 2 கோடி ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதித்து கிளிநொச்சி நீதிவான் இஸ்மாத் ஜமீல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த 12 தமிழக மீனவர்களின் வழக்கும் இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிவான் இந்தக் கட்டளையை வழங்கினார். கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்

2

## வெளிநாடு செல்ல கப்ராலுக்குத் தடை

முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் வெளிநாட்டிற்குச் செல்ல தடை விதித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அஜித் நிவார்ட் கப்ராலுக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து,கீர்த்தி தென்னகோனினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் மீது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார நெருக்கடிகளுக்கு ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்தள்ளப்பட்டிருப்பதானது வெறுமனே கடந்த இரண்டு வருடங்களாக நிலவி வரும் கொவிட் – 19 மற்றும் ரஷ்ய – யுக்ரேன் சண்டையினால் மாத்திரமல்ல. ஜே.ஆர். ஜெயவர்த்தன காலம்தொட்டு மஹிந்த ராஜபக்ஷ காலம் வரையில், பல்லாயிரம் கோடி ரூபாவை பல்வேறுபட்ட நாடுகளிலிருந்து அழிவு யுத்தத்திற்காக இவர்களால் பெறப்பட்ட கடன்களினால் ஏற்பட்டதாகும்.

சுதந்திரம் அடைந்த காலம்தொட்டு, தமிழ் மக்களை அடக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடாமல், மக்களை அழிப்பதற்கும் அவர்களின் அசையும், அசையா சொத்துகளை அழிப்பதற்காகவும் எமது சகோதர இனமான சிங்கள இனத்தைத் தவறாக வழிநடத்தி, பெறப்பட்ட கடன்களே இன்று நாடு எதிர்நோக்கியுள்ளபாரிய பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமாகும்.

இதன் காரணமாக வடக்கு – கிழக்கு மிகப் பெருமளவில் சுடுகாடாக மாற்றப்பட்டது. மறுதலையாக கொழும்பு போன்ற இடங்களிலும் பாரிய குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன. இவை அனைத்துமே இந்த நாட்டிற்குப் பேரிழப்புகள் ஆகும். இவை மாத்திரமல்லாமல், யுத்தத்தைக் கொண்டு நடாத்துவதற்காக இலங்கையின் முப்படையின் ஆளணிகளும் பல இலட்சங்களாக அதிகரிக்கப்பட்டன. இவர்களுக்கான ஆயுதங்கள், பெரும்பெரும் யுத்த தாங்கிகள், குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் என பல்லாயிரம் கோடி ரூபா செலவில் ஆயுதங்களும் வெடிபொருள்களும் கடனாக வேண்டிக் குவிக்கப்பட்டன.

யுத்தம் முடிந்து இன்று பதின்மூன்று வருடங்களாகியுள்ள சூழ்நிலையிலும், முப்படைகளின் ஆளணியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை. மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட படையினருக்கு மாதாந்த சம்பளம் வழங்க வேண்டும், இறந்துபோன மற்றும் ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும், நிறுவப்பட்டுள்ள படைத்தரப்பினின் அனைத்து முகாம்களும் பராமரிக்கப்படவேண்டும். இவ்வாறு பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரித்துச் செல்கின்றனவே தவிர, குறைப்பதற்கான வழி தென்படவில்லை.

யுத்தத்திற்குப் பின்னரான ஒவ்வொரு வரவு – செலவு திட்டத்திலும் பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கப்பட்டே வந்துள்ளது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒவ்வொரு வரவு – செலவுத் திட்டத்திலும் அதனைச் சுட்டிக்காட்டியதுடன், இவை குறைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியது. ஆனால் அரசு எமது கருத்துகளைச் செவிமடுக்கவில்லை. யுத்தம் முடிந்ததன் பின்னரும் பாதுகாப்பிற்கான செலவீனம் இவ்வளவு எதற்கு என்று கேட்டபோது, யுத்தத்திற்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக என்று பதில் சொல்லப்பட்டது.

யுத்தம் முடிந்து பதின்மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும் அதற்காக வாங்கிய கடன் செலுத்தி முடிக்கப்படாமல் இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இன்று நாட்டில் எந்தவொரு அத்தியாவசியப் பொருளையும் இறக்குமதி செய்வதற்கான அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை என்ற ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இதன் காரணமாக, அத்தியாவசியப் பண்டங்கள் மாத்திரமல்லாமல், வாகனங்களுக்கும் மின்சக்தி உற்பத்திக்குமான எரிபொருள் இறக்குமதியோ, சமையலுக்கான எரிவாயு இறக்குமதியோ எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைக்கு நாடு சென்றிருக்கிறது. விவசாயிகள் உழவு இயந்திரத்தை வயல்நிலங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இடையூறாக டீசல் தட்டுப்பாடு நிலவுகிறது. மீனவர்கள் தமது படகுகளைக் கடலுக்குக் கொண்டுசெல்வதற்கும் தமது ஜீவனோபாய தொழிலை மேற்கொள்வதற்கும் இடையூறாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்றது. பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றி இறக்குவதற்கான போக்குவரத்துப் பார ஊர்திகளுக்கான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. குடும்பத்தின் சமையலுக்குத் தேவையான எரிவாயுவுக்கும், மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

எரிபொருள்களுக்கான விலைகள் மலைபோல் அதிகரித்த போதிலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து, கல்வி என்று அனைத்துத் துறைகளுமே ஸ்தம்பிதம் அடையும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளன. அத்தியாவசியப் பொருள்களின் விலையோ எவரெஸ்ட் சிகரத்திற்கு ஒப்பாக உயர்ந்துள்ளன. பலபொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் உள்ளது. இவற்றிற்கு இலகுவாகவோ உடனடியாகவோ முழுமையான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியிடமோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமோ, ஐக்கிய மக்கள் சக்தியிடமோ அல்லது ஜே.வி.பியிடமோ வேறு எந்த அரசியல் கட்சியிடமோ இதனை உடனடியாக மாற்றியமைப்பதற்கான மந்திரக்கோல்கள் கிடையாது.

இதுவரை வரம்புமீறி கடன்களைப் பெற்றுக்கொண்டமைக்கான காரணத்தை சிங்கள கட்சிகள் புரிந்துகொண்டிருக்கின்றனவா என்ற கேள்வி பலமாக எழுகின்றது. இதுவரை வாங்கிய பெருமளவான கடன்கள் அனைத்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக அல்லாமல் அழிவுபூர்வமான நடவடிக்கைகளுக்காகவே வாங்கப்பட்டுள்ளன. ஆகவே இதில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமாக இருந்தால், சரியான பொருளாதாரக் கொள்கைகளும், சரியான வெளிவிவகாரக் கொள்கைகளும், தெளிவான அரசியல் சித்தாந்தத்துடன் வகுக்கப்படவேண்டும்.

எமது நாட்டிற்கு மிகமிக அவசியமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளை சிந்திப்போமாக இருந்தால், இப்பொழுது இருக்கக்கூடிய தேயிலை ஏற்றுமதி, ஆயத்த ஆடை ஏற்றுமதி, சுற்றுலாத் துறை வருமானம், மனிதவள ஏற்றுமதி இவற்றினூடாக ஈட்டப்படும் அந்நியச் செலாவணிக்கு மேலதிகமாக, அதனைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இதில் முக்கியமாக ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு முதலீடுகளை உள்ளெடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயப்படவேண்டும்.

பிரதானமாக 15 லட்சம் புலம் பெயர் தமிழர்களும் கணிசமான அளவு சிங்கள மக்களும் பல்வேறுபட்ட ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களது முதலீடுகளைக் கொண்டுவர வேண்டுமாக இருந்தால், மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு, முதலீடுகளை உள்வாங்குவதற்கான அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்டும். 50கோடி ரூபா, 100கோடி ரூபா என முதலீடு செய்பவர்களுக்கு அதற்கான காணிகளை வழங்கி, உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்துகொடுப்பது, அத்துடன் குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களுக்கான வரிச்சலுகைகளை வழங்குவது போன்ற அதிகாரங்கள் மாகாணத்திற்கு இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதனூடாக மாத்திரமே இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க முடியும்.

ஆகவே எங்கு தவறுகள் விடப்பட்டதோ, அந்தத் தவறுகளில் இருந்து மீண்டு, அதைத் திருத்திக்கொண்டு புதிய கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். சிங்கள பொருளியல் வல்லுனர்களும், புலமையாளர்களும் இனிமேலும் இனவாதத்திற்குள் மூழ்குவதை விடுத்து யதார்த்த சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, நாட்டின் பன்முகத்தன்மை, ஏனைய தேசிய இனங்களின் பலங்கள், பலவீனங்கள் இவற்றையும் புரிந்துகொண்டு, முதலீடுகளை உள்வாங்குவதற்கான திட்டங்களை மேற்கொள்ள முன்வரவேண்டும். இவற்றை விடுத்து, சரியான சிந்தனைகளோ, கொள்கைகளோ இல்லாத ஆட்சி மாற்றங்களோ தமிழினத்தை அழிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக்கலாம் என்ற எண்ணங்கள் சரியான பலாபலன்களைத் தராது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வது அவசியம்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்திற்குள் தள்ளிய பொறுப்பை அனைத்து சிங்கள கட்சிகளும் ஏற்றுக்கொண்டு, அவற்றிலிருந்து விடுபட்டு தெளிந்த சிந்தனையுடன் மாற்றங்களை உருவாக்க முன்வர வேண்டும்.

அதே சமயம், மிகச் சிறிய நாடான இலங்கைத் தீவிற்கு மிகப் பிரமாண்டமான இவ்வளவு படையணியினர் தேவையில்லை என்பதைப் புரிந்துகொண்டு, அதனை நாட்டின் தேவைக்கேற்ப குறைப்பதன் மூலம் பல்லாயிரம் கோடி ரூபா விரயம் ஆவதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான தொழில்களில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். – என்றுள்ளது.

## 12 தமிழக மீனவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள உதவிப் பணிப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட இந்தக் கட்டளையை வழங்கினார். வழக்கு மே மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த மீனவர்களின் கை அடையாளங்களைப் பதியும்படி பணித்த நீதிவான் இதற்குமுன்னர்குற்றமிழைத்தவர்களின் கைரேகைகளுடன் அவற்றை ஒப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவும் பணித்தார்.

## குறிகட்டுவானில் படகு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடவும் அதிக பயணிகள் ஏற்றியதன் காரணத்தினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

இருந்தபோதும் பயணிகளை ஏற்ற போதே அனர்த்தம் ஏற்பட்டமையினால் கரையில் நின்ற கடற்படையினர் மற்றும் சங்க உறுப்பினர்கள் உடனடியாக குதித்து அசம்பாவிதம் ஏதும் இடம்பெறாமல் தடுத்துள்ளபோதும் அளவிற்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிமை தொடர்பில் எவரும் வாய் திறக்கவில்லை எனக் கூறப்பட்டது.

## சர்வதிகாரியான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருள்கள் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் இன்று நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பழனி திகாம்பரம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்த அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். மலையகத்திலும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை தோளில் சுமந்து மீட்டெடுத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களும், இந்த அராஜக ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக வீதியில் இறங்கிவிட்டனர்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அரச எதிர்ப்பு அலையே வீசுகின்றது. கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்குப் பெரும்பாடு பட்டவர்களும், அணிதிரண்டு வாக்களித்தவர்களும், 'கோட்டா வீட்டுக்குச் செல்ல வேண்டும்' என்பதைத் திட்டவட்டமாக இடித்துரைத்து வருகின்றனர். ஆனால், மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் ஜனாதிபதியும், ஆட்சியாளர்களும் அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மக்கள் கொந்தளிப்புக்கு அஞ்சி மலையகத்தில் உள்ள, கொள்ளையற்ற அரசியல்வாதிகள்கூட இன்று அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றுள்ளனர். அவர்கள் மக்கள் பக்கம் நின்று இந்த முடிவை எடுக்கவில்லை. மாறாக அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாளையே அமைச்சுப் பதவி கிடைத்துவிட்டால், மக்களைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டு 'பல்டி' அடித்துவிடுவார்கள். எனவே, இந்த ஜனாதிபதி, அரசு வீடு செல்லும்வரை போராடுங்கள். நாம் உங்களுக்கு துணையாக நிற்போம் – என்றார்.

## கோட்டா வீட்டுக்குப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார், எம்.வேலுகுமார் ஆகியோருடன் கூட்டம் நடைபெற்ற பிரதான விளையாட்டு மைதானத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றடைந்தனர்.

தொடர்ந்து பிரதான மேடைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ பிரதான மேடையை வந்தடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. மக்கள் முன்னிலையில் சஜித் அங்கு உரையாற்றினார்.

## தந்தை, தாய், மகள் .......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## போராட்ட ஒழுங்கு அவசியம்

'உன் சுதந்திரம் என்பது அடுத்தவனின் மூக்கு நுனிவரை' என்று ஒரு பொன்மொழி இருக்கின்றது. உன் கையைத் தாராளமாக வீசும் உரிமை – சுதந்திரம் – உனக்கு உள்ளது. ஆனால் அது அடுத்தவனின் மூக்கு நுனி வரை மட்டும்தான். அதைத் தாண்டி, அவன் மீது படக்கூடியதாக நீ உன் கையை வீச முடியாது. இது புரிந்து கொள்ளக் கூடிய விடயம்தான்.

அரசையும் ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்பும் இலக்கோடு வீதிக்கு இறங்கியிருக்கும் பொதுமக்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய வழிகாட்டல் பொன்மொழி இது.

ஜனாதிபதியையும் அரசையும் தமது வாக்குகள் மூலம் – தமது இறைமையைப் பிரயோகித்து – ஆட்சியதிகாரத்திற்குக் கொண்டு வந்தவர்கள் இப்போது இந்தப் போராட்டத்தை நடத்தும் மக்கள்தான். அவர்கள் அதற்காகக் கொடுத்த ஆணையின் காலம் ஐந்து வருடங்களாகும்.

தமது தெரிவுகள் பிழை எனக் கருதியதால் – உணர்ந்தமையால் – முன்கூட்டியே அந்த ஆணையை திரும்பப்பெறும் தமது விருப்பத்தை – முடிவை – வேறு வழி மார்க்கம் இல்லாமையால் இப்படி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி, வெளிப்படுத்தி, நடைமுறைக்குக் கொண்டுவர அவர்கள் முயற்சிக்கின்றார்கள். அது தவறில்லை. அதனைத் தவறில்லாமல் தொடர்வது முக்கியம்.

மக்கள் வீதிக்கு இறங்கி தங்கள் கருத்தை ஏகோபித்துத் தெரிவிக்கும்போது பொதுநலனுக்கும் அமைதிக்கும் பாதிப்பு ஏற்படும். பலரின் சுதந்திரம், உரிமை பறிக்கப்படும்.

அதிலே சட்ட மீறல், சட்டமறுப்பு இருக்கும். ஆனால் அது வன்முறை என அர்த்தப்படும் சட்ட மீறலாகி விடக் கூடாது.

அகிம்சை வழியில் – காந்திய நெறியில் – வன்முறையற்ற பாதையில் – அது மக்கள் பேரெழுச்சியாக இடம்பெற வேண்டும். அப்படி அதனை முன்னெடுப்பது கத்தியில் நடப்பது போன்றது. கொஞ்சம் சரிந்தால் – சாய்ந்தால் – வன்முறை தன் கைவரிசையைக் காட்டி விடும்.

இத்தகைய போராட்டங்களுக்குப் போகின்றவர்கள் – பங்குபற்றுபவர்கள் – ஒவ்வொருவரும் தனித்தனி மனிதர்களாக நல்லவர்கள்தான். ஆக, இந்த ஆட்சிப் பீடத்தின் எதேச்சதிகாரப் போக்கினால் ஏற்பட்ட பாதிப்பு, ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களை அதிலிருந்து கலைக்க வேண்டும் என்ற மன ஓர்மத்தைத் தந்திருக்கும். அதனை சத்திய ஆவேசத்துடன் வெளிப்படுத்த வேண்டும் என்ற மன எழுச்சி அவர்கள் ஒவ்வொருவரினதும் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் என்பதும் உண்மைதான்.

தனித்தனியாக ஒவ்வொருவரையும் பொறுத்த வரையில் அந்த மனவெழுச்சி வன்முறை வடிவம் கொண்ட தீவிரமாக இருக்காது. ஆனால் கூட்டமாகச் சேரும்போது கும்பல் மனப்பாங்கு (Mob Mentality) ஏற்பட்டு, அது மோசமான வன்முறை வடிவம் எடுத்து விடுவது இயல்பு. சர்வசாதாரணம்.

அத்தகைய தவறுக்கு இடமளிக்காமல் போராட்டங்களில் பங்குபற்றுவோர் மிகக் கவனமாக – மிகச் சிரத்தையோடு – சரியான பொறுப்புணர்வோடு – நடந்து கொள்ள வேண்டும். கும்பல் மனப்பான்மைக்கு இடமளித்து, வன்முறையில் குதித்தால், மக்களின் இந்த எழுச்சிப் போராட்டத்தின் போக்கும் இலக்கும் பிசகி விடும்.

அத்தகைய மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கான சர்வதேச ஆதரவைக் கூட இழந்துவிட நேரிடும். மக்களின் இந்த போராட்ட உரிமைகளை இரும்புக் கரம் கொண்டு அடக்க முயலும் ஆட்சியாளர்களின் விருப்புக்கு சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் நியாயப்படுத்தல் கிடைத்து விடும். போராட்டத்தின் திசை திரும்பி அது இலகுவில் சிதைந்து போய்விடும்.

மக்கள் தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் போராட்டங்களை ஒன்று திரண்டு முன்னெடுப்பது மட்டுமல்ல, அதில் ஒழுங்கு முறையையும், மன உறுதியையும் தளர விடாது மேற்கொள்வது முக்கியம்.




## மக்கள் வங்கி ஊழியர்களும் அரசுக்கு எதிராக போராட்டம்

அரசாங்கத்திற்கு எதிராக இலங்கை மக்கள் வங்கி ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன் னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் கொழும்பு இலங்கை மக்கள் வங்கி தலைமை அலுவலகம் முன்பாக நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் எஸ்.ரி.எவ்.சி. வங்கி ஊழியர்களும் இணைந்து இந்த எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

## பொருளாதார வளர்ச்சி 2.4 வீதமாக குறையும்!

### ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு


இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 2.4 வீதம் ஆகக் குறையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட 1.3 சதவீதம் சரிவாகும். 2021 இல், இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.7 சதவீதமாக இருந்தது.

கடன்கள், குறைந்த வெளிநாட்டு கையிருப்பு மற்றும் கொரோனாத் தொற்று ஆகியவை வீழ்ச்சிக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை அடுத்த ஆண்டில் 2.5 வீதமாக சிறிதளவு முன்னேற்றம் காணும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

## 'காவியநாயகன்' திருப்பாடுகளின் நாடகம் இன்று மாலை ஆரம்பமாகின்றது



திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன்,சனி,ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் இவ்வாற்றுகை ஆரம்பமாகவுள்ளது.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் இவ்வாற்றுகை கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மேடையேற்றப்படவில்லை என்பதுடன் கடந்த ஆண்டு 'களங்கம்' என்னும் பெயரில் சிறிய அளவில் மேடையேற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு வழமை போல் பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலும் நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள். திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து மாபெரும் படைப்பாக தயாரித்தளிக்கும் இவ்வாற்றுகையை ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளாரால் 2001 ஆம் ஆண்டில் முதன் முதலாக எழுதப்பட்ட 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம், 'மனிதம்' என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் அமைந்துள்ள இயேசுவின் வாழ்வில் அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது. 'காவிய நாயகன்' இதற்கு முன்னதாக 2001, 2004, 2008, 2013 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டபோது நெறியாள்கையை நீ.மரியசேவியர் அடிகள், யோ.யோன்சன் ராஜ்குமார் ஆகியோர் மேற்கொண்டார்கள். இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் நாடகப் பொறுப்பாளரும் பெண் அரங்கக் கலைஞருமான வைதேகி செல்மர் எமில் மேற்கொண்டுள்ளார். இவர் 2014 ஆம் ஆண்டில் 'வேள்வித் திருமகன்' ஆற்றுகையை நெறியாள்கை செய்து மிகுந்த வரவேற்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய எண்ணெய்க் கிடங்குத் தாக்குதல்; உறுதிப்படுத்த முடியாது என்கிறது உக்ரைன்



ரஷ்ய எண்ணெய்க் கிடங்கில் தாக்குதல் நடைபெற்றதாக கூறியுள்ள நிலையில், இதனை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியாது என, உக்ரைன் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

தங்கள் நகரத்தில் உள்ள எண்ணெய் கிடங்கை உக்ரைனிய ராணுவ ஹெலிக்கொப்டர்கள் தாக்கின என, ரஷ்யாவின் பெல்கோரோட் நகர ஆளுநர் குற்றம்சாட்டியுள்ளார். இந்நகரம் உக்ரைன் தலைநகர் கீயவின் வடக்கில் அருகாமையில் அமைந்துள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா, இந்த தாக்குதல் குறித்து தன்னால் உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியாது என தெரிவித்துள்ளார். ராணுவ தகவல்கள் தன்னிடம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் பொதுமக்களில் ஒருவன், என வார்சாவில் அவர் அளித்த பேட்டியில் தெரிவித்தார் என, ஏ.எவ்.பி. செய்தி முகமை தெரிவித்துள்ளது.

இதனிடையே, உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகமும் இதுகுறித்து கருத்து தெரிவிக்க மறுத்துள்ளது. அந்நாட்டு செய்தித்தொடர்பாளர் ஒலெக்சாண்டர் மொடுஸ்யானிக், உக்ரைன் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தற்போது தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. ரஷ்ய பகுதிகளில் நடக்கும் எந்தவொரு அழிவுக்கும் உக்ரைன் பொறுப்பு என்பது இதன் அர்த்தமாகாது.

இந்த குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ என்னால் முடியாது என அவர் தெரிவித்தார் என, ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவித்துள்ளது

## ஆப்கானில் பஞ்சத்தில் 90 லட்சம் மக்கள்




ஆப்கானிஸ்தானில் 90 லட்சம் மக்கள் பஞ்சத்தின் ஆபத்தில் இருக்கின்றனர் என ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றினர். இதையடுத்து அங்கு மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. பெண்களுக்கு கல்வி, வேலைக்குச் செல்ல முடியாத சூழல், போரின் தாக்கம் ஆகியவற்றால் அங்கு பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. போர் முடிவுக்கு வந்தாலும் மனித உரிமை மீறல்கள் அங்கு அதிகமாக இருக்கின்றன என ஐ.நா. மற்றும் உலக நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம் மிகவும் சிதைந்துள்ளதாகவும் சுமார் 90 லட்சம் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார். இதனால் ஆப்கானிஸ்தானுக்கு ஐ.நா. உதவி செய்ய உலக நாடுகள் நிதியளிக்க முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## விக்கிபீடியாவை எச்சரிக்கும் ரஷ்யா



உக்ரைன் மீதான தாக்குதல் தொடர்பான தகவல்களுக்கு 40 லட்சம் ரூபிள் (ரஷ்ய பணமதிப்பு) அபராதம் விதிக்கப்படும் என, தகவல் களஞ்சியமாக விளங்கும் 'விக்கிபீடியா' இணையதளத்திற்கு ரஷ்யா தொலைதொடர்புத்துறை ஒழுங்குமுறை ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவிற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன. ரஷ்யா-விற்கு எதிராக இணையதளங்களில் கருத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், ரஷ்யாவைச் சேர்ந்தவர்களை குறிவைத்து, உக்ரைன் மீதான ராணுவ நடவடிக்கை குறித்து பதிவு செய்யப்பட்ட தவறான தகவல்களை உடனடியாக நீக்க வேண்டும் என விக்கிபீடியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ரஷ்ய தொலைதொடர்புத்துறை ஒழுங்குமுறை ஆணையம், 40 லட்சம் ரூபிள் அபராதம் விதிக்கப்படும் எனவும் கூறியுள்ளது.

முன்னதாக, இதுபோன்று தொடர்ந்து தவறு செய்தால் 80 லட்சம் ரூபிள் ( 91,533 அமெரிக்க டொலர்) அல்லது நிறுவனத்தின் வருமானத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்படும் என கூகுள் நிறுவனத்திற்கு ரஷ்யா எச்சரித்திருந்தது. அந்த நிறுவனத்தின் சமூக வலைதளம் மூலம் ரஷ்யா குறித்து தவறான தகவல் பரப்பப்படுவதாகவும் குற்றம்சாட்டியது. உக்ரைன் மீது தாக்குதல் தொடங்கிய நிலையில், அமெரிக்காவை தலைமையிடமாக வைத்து செயல்படும் சமூக வலைதளங்களுக்கு ரஷ்யா கட்டுப்பாடு விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## ஒஸ்கார் அமைப்பிலிருந்து விலகினார் வில் ஸ்மித்

ஒஸ்கார் விருது விழாவை நடத்தும் அமைப்பிலிருந்து, நடிகர் வில் ஸ்மித் பதவி விலகியுள்ளார். ஒஸ்கார் மேடையில், காமடி நிகழ்ச்சி தொகுப்பாளர் கிறிஸ் ராக்கின் கன்னத்தில் அறைந்தமைக்கு, ஒஸ்கார் அமைப்பு நடவடிக்கை எடுக்கவிருந்த நிலையில், தனது பதவியை வில் ஸ்மித் ராஜினாமா செய்துள்ளார்.



## ஆப்கானில் பீரங்கி வெடிகுண்டு வெடித்து 5 குழந்தைகள் சாவு

ஆப்கானிஸ்தானில் தென்கிழக்கு ஹெல்மண்ட் மாகாணத்தில் பீரங்கி வெடிகுண்டு வெடித்ததில், 5 குழந்தைகள் பலியாகினர் மற்றும் 2 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஹெல்மண்ட் மாகாணத்தின் மார்ஜா மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை நடந்ததாக ஹெல்மண்டின் மாகாண அதிகாரிகள் கூறினர் என தி காமா ஊடகம் தெரிவித்துள்ளது.

குழந்தைகள் பீரங்கி வெடிகுண்டுகளுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது பீரங்கி வெடிகுண்டு வெடித்தது. அதில் 5 குழந்தைகள் பலியாகினர். காயமடைந்த 2 பேர் மார்ஜா மாவட்ட சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அப்துல்லா தெரிவித்தார்.

வெடிக்காத துண்டுகள், பீரங்கி வெடிகுண்டுகள் மற்றும் ரொக்கெட்டுகள் மூலம் ஆப்கானிஸ்தான் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழக்கின்றமை கவலையளிக்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவில் புதிய வகை ஒமிக்ரோன் தொற்று: தகவல் தவறானது என்கிறது சுகாதாரத்துறை



மும்பையின் பிரஹன்மும்பை மாநகராட்சி நிர்வாகம் கொரோனா வைரஸின் புதிய எக்ஸ் இ வகை மாறுபாடு ஒரு நோயாளியிடம் கண்டறியப்பட்டுள்ளது என நேற்று தெரிவித்திருந்தது. இங்கிலாந்து, சீனா, ஹொங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளை தொடர்ந்து இந்தியாவிலும் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என மும்பை மாநகராட்சியினால் அறிவிக்கப்பட்டது.

சீனாவில் பரவி வரும் இந்தப் புதிய வகை ஒமிக்ரோன் பாதிப்பு மும்பையில் ஒருவருக்கு கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியான நிலையில் அந்த தகவல் சரியானதல்ல என தற்போது மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எக்ஸ் இ வகை மாறுபாடு என்று கூறப்படும் தொற்றுக்கான மாதிரி, மரபணு நிபுணர்களால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. மும்பையில் கண்டறியப்பட்ட இந்த மாறுபாட்டின் மரபணு அமைப்பானது, எக்ஸ் இ வகை மாறுபாட்டின் மரபணுப் படத்துடன் தொடர்புபடவில்லை என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். தற்போதைய சான்றுகளின்படி இது கொரோனா வைரஸின் எக்ஸ் இ வகை மாறுபாடு என அடையாளம் காட்டவில்லை என்று இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் தரப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## தினகரனுக்கு அமுலாக்கத்துறை சம்மன் விசாரணைக்கு நேரில் ஆஜராக உத்தரவு



ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு கடந்த 2017 ஆம் ஆண்டு அ.தி.மு.க. இரு அணிகளாக பிளவுபட்டது. ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் ஓர் அணியும், சசிகலா தலைமையில் மற்றொரு அணியும் செயல்பட்டு வந்தன. இதன் காரணமாக தொடுக்கப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் அப்போது அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது.

இதையடுத்து இரட்டை இலைச் சின்னத்தைப் பெற ஓ.பன்னீர்செல்வம் அணியினரும் சசிகலா அணியினரும் முயற்சி செய்து வந்தனர். இந்த நிலையில் இரட்டை இலை சின்னத்தை சசிகலா அணியினருக்கு ஒதுக்க தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு டி.டி.வி. தினகரன் லஞ்சம் கொடுக்க முயன்றார் என குற்றஞ்சாட்டப்பட்டது.

லஞ்சம் வழங்குவதற்காக டி.டி.வி. தினகரனிடம் பணம் பெற்றார் என இடைத்தரகர் சுகேஷ்சந்திரசேகர் என்பவரை கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் டெல்லி பொலிஸார் கைது செய்தனர்.

இதுதொடர்பாக அப்போது டி.டி.வி.தினகரனிடமும் அவர்கள் நான்கு நாள்கள் விசாரணை நடத்தி கைது செய்தனர். சிறையில் அடைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவரது உதவியாளர் மல்லிகார் ஜுனாவும் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக டெல்லி பொலிஸாரின் முதல் தகவல் அறிக்கையை அடிப்படையாக கொண்டு அமுலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த வழக்கில் இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகரை அமுலாக்கத்துறை தற்போது கைதுசெய்தது. பண மோசடி தடுப்பு சட்டப்பிரிவுகளின் கீழ் லஞ்ச வழக்கு தொடர்பாக சுகேஷ் சந்திரசேகரிடம் விசாரணை நடத்திவருகிறார்கள்.

இந்த நிலையில் இரட்டை இலைச் சின்னம் பெற லஞ்சம் கொடுக்க முயன்றார் என கூறப்படும் வழக்கில் டி.டி.வி. தினகரனுக்கும் அமுலாக்கத் துறையினர் சம்மன் அனுப்பியுள்ளனர். விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு சம்மனில் தெரிவித்துள்ளனர்.

## தொலைதூரக் கிராமங்களுக்கான புதிய மருத்துவசேவை திட்டம் ஸ்டாலின் ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்கிறார் அமைச்சர்



தமிழக சட்டசபையின் கேள்வி நேரத்தின் போது அ.தி.மு.க. உறுப்பினர் மரகதம் குமரவேல் எழுப்பிய மருத்துவ சேவைகள் பற்றாக்குறை தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்,

தமிழகத்திற்கு 25 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் விரைவில் தொடங்கப்படவுள்ளன. அப்போது உறுப்பினர் தொகுதிக்கு உட்பட்ட அவர் கூறும் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறு உள்ளதா?, என்பது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் நாளை தொலைதூர கிராமங்களுக்கும், மருத்துவ சேவை அளிக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை முதலமைச்சர் தொடங்கி வைக்கவுள்ளார். இந்த மருத்துவ சேவை மூலம் 389 வாகனங்களில் மருத்துவர், தாதி, மருத்துவ உதவியாளர் உள்பட 4 பேர் பயணம் செய்வார்கள். அனைத்து ஒன்றிய பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது, என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து பேசிய சபாநாயகர் அப்பாவு எனது தொகுதிக்கு உட்பட்ட கடற்கரை பகுதியான கூத்தங்குழியிலும் 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றை ஏற்படுத்த ஆவண செய்யுங்கள், என்று குறிப்பிட்டார்.

## ஆபத்தான சூழலின்போது வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என பிரதமர் மோடி உறுதியளிப்பு



உக்ரைன் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், உக்ரைனில் இந்தியர்கள் மீட்பு நடவடிக்கை மற்றும் தற்போதைய சூழல் குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

உக்ரைன் விவகாரம் மற்றும் ஒப்ரேஷன் கங்கா நடவடிக்கை மூலம் நடைபெற்ற மாணவர்கள் உள்ளிட்ட இந்தியர்களின் மீட்பு தொடர்பாக இந்தியா எடுத்த நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு இந்தியப் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார். இதில் பங்கேற்று விவாதத்தை ஆரோக்கியமாக மாற்றியதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என தமது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்த விவாதம் மூலம் இரு தரப்பும், இந்திய வெளியுறவுக் கொள்கை விவகாரம் தொடர்பான ஆக்கப்பூர்வமான தகவல்கள் மற்றும் இரு தரப்பு நல்லிணக்கத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுவதாகவும் மோடி தெரிவித்துள்ளார்

நமது சக இந்தியரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் கவனித்துக் கொள்வது நமது கூட்டுக் கடமை என்றும், ஆபத்தான சூழ்நிலைகளின் போது நமது மக்கள் எந்த பிரச்சினையையும் சந்திக்காமல் இருப்பதை உறுதி செய்ய இந்திய மத்திய அரசு எந்த வாய்ப்பையும் தவற விடாது என்றும் இந்தியப் பிரதமர் மோடி தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



## உக்ரைன் அரசு இந்திய மாணவர்களுக்கு சிறப்பு சலுகையை வழங்கியுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் உக்ரைன் விவகாரம் குறித்து எழுப்பப்பட்ட விடயங்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பதிலளித்து உரையாற்றியுள்ளார்.

அப்போது அவர், உக்ரைனிலிருந்து நாடு திரும்பிய மருத்துவ மாணவர்களின் படிப்பை நிறைவு செய்ய ருமேனியா, ஹங்கேரி, போலந்து, கஜகஸ்தான் ஆகிய உக்ரைனின் அண்டை நாடுகளில் பேச்சு நடத்தி வருகிறோம்.

இந்தியா திரும்பிய மருத்துவ மாணவர்களுக்கு உக்ரைன் அரசு சிறப்பு சலுகை வழங்கி உள்ளது. மருத்துவக் கல்வியை முடிக்க ஓராண்டு தளர்வினை அது வழங்கியுள்ளது.

உக்ரைனில் இருந்து நாடு திரும்பிய இந்திய மருத்துவ மாணவர்கள் கல்வியை தொடர நடவடிக்கை எடுக்கப்படும். போர்களை உடனடியாக நிறுத்துவதற்கும், வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.

போர் தொடர்பான விடயத்தில் இந்தியா ஏதேனும் உதவி செய்ய முடிந்தால், நாங்கள் பங்களிப்பதில் மகிழ்ச்சி அடைவோம் என டெல்லி வந்த ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவிடம் தெரிவித்தோம், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# கல்முனை மாநகரசபைக்கு நியமிக்கப்பட்ட புதிய ஆணையரின் பதவியேற்பிலும் சிக்கல்



கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளர் கடமையேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 14 (3) இன் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் பிரதம நிர்வாக அதிகாரி என்ற ரீதியில் மாநகர முதல்வராகிய எனக்கு, கடமையில் இருந்து வந்த மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சாரின் இடமாற்றம் தொடர்பாகவோ அல்லது புதிய ஆணையாளர் நியமனம் பற்றியோ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்தோ அல்லது பிரதம செயலாளரிடமிருந்தோ அல்லது ஆளுநர் தரப்பிலிருந்தோ எவ்வித அறிவித்தலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

அதேபோல், புதிய ஆணையாளராக நியமனம் பெற்றவரும் அது குறித்து எனக்கு அறிவிக்கவில்லை. அவ்வாறே கடமையில் இருந்த ஆணையாளர் தமக்கு இடமாற்றம் வந்திருப்பதாக தெரியப்படுத்தவுமில்லை.

இந்நிலையில், கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை, நான் அலுவலகத்தில் இல்லாத வேளையில், சிவலிங்கம் அவர்கள் ஆணையாளராக கடமையேற்க வந்திருக்கிறார். அவருடன் மாநகரசபை உறுப்பினர் ராஜன் மற்றும் பௌத்த தேரர் உள்ளிட்ட மதக் குருக்களும் மாநகர சபைக்கு வருகை தந்துள்ளனர். அப்போது ஆணையாளரின் அலுவலக அறையை திறக்குமாறு ராஜன், எமது மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தரை பலவந்தப்படுத்தி, அச்சுறுத்தியமையுடன் நிர்வாக செயற்பாடுகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தார்.

அது மாத்திரமல்லாமல், மாநகர சபையின் பிரதான நுழைவாயில் கதவுகளுக்கு அவர் பலாத்காரமாக பூட்டுப்போட்டு, மூடி வைத்து, மாநகர சபையின் அலுவலக செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இதனால் நீண்ட நேரம் மாநகர சபையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தமையுடன் அங்கு பரபரப்பான சூழ்நிலையும் பதற்றமும் ஏற்பட்டிருந்தன. பொலிஸாரின் வருகையையடுத்தே நுழைவாயில் கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இவ்வாறான அடாவடி செயற்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாகவே புதிய ஆணையாளரின் கடமையேற்பு நிகழ்வு தடைப்பட்டிருக்கிறது.

இவ்விவகாரம் பொலிஸ் முறைப்பாடுகளையடுத்து நீதிமன்றம் வரை சென்று, கடந்த திங்கள், செவ்வாய் இரு தினங்களும் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றன. இரு தரப்பினரதும் சமர்ப்பணங்களை உள்வாங்கிய நீதிவான், இவ்விடயம் தொடர்பில் இந்நீதிமன்றமானது எவ்வித கட்டளையையும் பிறப்பிக்கும் அதிகார வரம்புக்குட்பட்டதல்ல எனத் தெரிவித்து, வழக்கை முடிவுறுத்தியுள்ளார்.

உண்மையில், புதிய ஆணையாளர் தனது நியமனம் மற்றும் கடமையேற்புக் குறித்து எனக்கு முறையாக அறிவித்து, கலந்துரையாடியிருப்பாராயின் இவ்வாறான சர்ச்சைகளைத் தவிர்த்திருக்க முடியும். இவ்விடயத்தில் இனவாதிகளை முன்னிறுத்தியமையால், அது அரசியலாகவும் இனவாதமாகவும் மாற்றப்பட்டு, தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

விடயம் இவ்வாறிருக்க, இடமாற்றப்பட்ட ஆணையாளர் முஸ்லிம் என்பதாலும் புதிய ஆணையாளர் தமிழர் என்பதாலும் அவர் கடமையேற்க விடாமல் தடுக்கப்பட்டார் என மாநகர சபை உறுப்பினர் ராஜன் முகநூல்களில் இனவாத நச்சுக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

புதிய ஆணையாளர் கடமையேற்பு விடயத்தில், தான் மூக்கை நுழைத்து, சண்டித்தன அரசியல் செய்ய முனைந்தமையாலேயே ஆணையாளர் கடமையேற்பு சர்ச்சையாக மாறியது என்பதை மூடி மறைப்பதற்காகவே அவர் இவ்வாறான இனவாதக் கருத்துக்களை பரப்பி வருகின்றார்.

கல்முனையில் எப்போதுமே இனவாதத்தைத் தூண்டி விடுகின்ற இவரது செயற்பாடுகள் குறித்து தமிழ் சமூகம், குறிப்பாக கல்முனை வாழ் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன்- என்று முதல்வர் றகீப் தெரிவித்துள்ளார்.

## சாய்ந்தமருது, கல்முனையில் தொடரும் மக்கள் போராட்டம்



(நூருல் ஹூதா உமர்)

நாட்டின் பெருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, கல்முனை பிரதேசங்களில் இரண்டாவது நாளாக புதன்கிழமை இரவும் தேசியக் கொடியை கையில் ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நிறைய இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிரான கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சாய்ந்தமருதில், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலில் இருந்து ஆரம்பித்து மாளிகாசந்தி வரை சென்றது ஆர்ப்பாட்ட பேரணி. கல்முனையில் நாகூர் ஆண்டகை தர்கா சரிபிலிருந்து ஆரம்பித்த போராட்ட பேரணி கல்முனை பிரதான வீதிகளிலும் இடம்பெற்றது.

இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதனைக் கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் துரிதகதியில் மேற்கொண்டிருந்தனர்.



## மருதமுனை வைத்தியசாலையின் பணியாளர்களும் கவனவீர்ப்பில்!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் ஒன்றிணைந்து நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சுகாதாரத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு தடைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டுள்ளது சில மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் உடனடியாக இதனை சீர் செய்ய வேண்டும், இல்லையேல் எதிர்காலத்தில் சுகாதாரத்துறை மிக மோசமாக பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியாததாக மாறிவிடும் எனவும் தெரிவிக்கும் வைத்தியசாலை பணியாளர்கள் அது தொடர்பில் கவனத்தையீர்க்கும் வகையில் சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் வாழைச்சேனை பகுதியில் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புணானை மியான்குளம் பகுதியில் வைத்து 3 கிலோ 100 கிராம் கேரளா கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார். வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கஞ்சாவை கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்பு பகுதிக்கு வியாபாரத்திற்காக இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்த போது புணானை மியான்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பதவி நீக்கம்

கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக், அப்பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை, கல்முனை மாநகர சபைக்கான தெரிவத்தாட்சி அதிகாரி சுகன் ஸ்ரீநாத் அத்தநாயக வெளியிட்டுள்ளார்.

இந்த உறுப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவி வகித்துக் கொண்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவு வழங்கி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு, சுதந்திரக்கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இது குறித்து அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவினால் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர், கல்முனை மாநகர சபைத் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நற்பிட்டிமுனை வட்டாரத்தில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷவினர் வீட்டுக்குச் செல்லவேண்டும் என்றே மூவின மக்களும் கோருகின்றனர்!

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு

நாட்டில் ஏற்பட்டுள்ள மக்களின் போராட்டத்துக்கு ஜனாதிபதியும் அரசாங்கமுமே காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பேரையும் மக்கள் விமர்சிக்கின்றனர் என்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசுகிறோம். இந்த பிரச்சினை எங்கு ஆரம்பித்தது என்பதைக் கண்டறிய வேண்டும்.

2019 ஆம் ஆண்டு நாட்டில் இனவாதத்தை தூண்டி, அடிப்படைவாதத்தை தூண்டி, மத வாதத்தை தூண்டி, ஈஸ்டர் தாக்குதலை விற்றே தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தது. அங்கிருந்தே ஏமாற்றுதல் ஆரம்பமாகியது.

ஏமாற்றி 69 லட்சம் வாக்குகளையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெற்றுக்கொண்டு, கடந்த இரண்டரை ஆண்டுகளாக நாட்டின் ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்கள் ஏமாற்றியது. கொவிட் தொற்று ஆரம்பமானபோது நாங்களும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒவ்வொரு பாணி மருந்துகளை நம்பாதீர்கள், தடுப்பூசியை கொண்டு வாருங்கள் என்று கூறினோம்.

அப்போது எங்களை தேசத்துரோகிகள், தேசியத்தை அங்கீகரிக்காதவர்கள் என்று கூறினர். இதன் பின்னர் முகக்கவசங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்கிறீர்களா? என்று கேட்டோம், அப்போதும் எங்களை விமர்சித்தனர்.

இறுதியில் தடுப்பூசியை இறக்குமதி செய்தனர். பின்னர் எங்களை திட்ட ஆரம்பித்தனர். தற்போது நாங்கள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பாதெனி எங்கே? என்று கேட்க நேரிடும்.

அவரே சேதனப் பசளையை இறக்குமதி செய்யுமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கினார். உலகில் எங்காவது உடனடியாக சேதனப் பசளை பயிர் செய்கைக்கு மாறிய நாடுகள் உள்ளனவா?.

ஜனாதிபதியின் ஆவணம் காரணமாக, பாதெனிய என்று ஒற்றை நபர் கூறியமையைக் கேட்டு நாட்டின் கமத்தொழிலாளர்கள் மற்றும் விவசாயத்தை படுகுழியில் தள்ளினார். விவசாய ஏற்றுமதி மூலம் நாட்டுக்கு வருடாந்தம் கிடைக்கும் 240 கோடி டொலர்களை இல்லாமல் செய்தார்.

அதேபோலவே கொவிட் மரணங்கள் சம்பந்தமான பிரச்சினையில் முஸ்லிம்கள் உடல்களை பலவந்தமாக தகனம் செய்து, நாட்டில் இரண்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள்.

ஆளும் கட்சியில் இருக்கும் அலி சப்றியையும் அசௌகரியத்துக்கு உள்ளாக்கினர். கொவிட் தொற்றால் மரணித்தவர்களை பலவந்தமாக தகனம் செய்த தன் சாபமே தற்போது ஏற்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் நாட்டின் பொருளாதார கொலையாளி என நாங்கள் கூறினோம். அவர் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ரூபாவின் பெறுமதியை பலவந்தமாக கட்டுப்படுத்தி வைத்திருந்தார். எதிர்க்கட்சியினராகிய நாங்கள் அதனைக் கைவிடுமாறு கோரினோம். அப்படி செய்திருந்தால், நாட்டுக்கு அந்நிய செலாவணி வந்திருக்கும், மாதம் 45 கோடி டொலர் கள் கிடைத்திருக்கும். அப்படி டொலர் கிடைத்திருந்தால், பொருள்களின் விலைகள் அதிகரித்திருக்காது.

பொருள்களின் விலைகள் அதிகரிக்காதிருந்திருந்தால், பொருள்களை கொள்வனவு செய்ய வரிசைகளும் ஏற்பட்டிருக்காது, இந்த நிலைமையும் ஏற்பட்டிருக்காது, மக்கள் வீதியில் இறங்கி இருக்கவும் மாட்டார்கள்.

வீதியில் இறங்கி இருப்பது எமது கட்சியினர் அல்ல என்பதைத் தெளிவாக கூறுகின்றோம். அவர்கள் எங்களுக்கு வாக்காளித்தவர்களும் இல்லை. 69 லட்சம் வாக்குகளை வழங்கி, பாற்சோறு சாப்பிட்ட மக்களே, கோட்டா வீட்டுக்கு போ, ராஜபக்ஷ வீட்டுக்கு போ என்று கூறுகின்றனர்.

மக்களின் இந்த போராட்டம் தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும், எந்த வகையிலும் இதனை வன்முறையை நோக்கி கொண்டு செல்ல இடமளிக்க முடியாது. நாட்டின் சட்டம், அரசமைப்புக்கு அமைய மக்களின் போராட்டங்களுக்கு இடமளிக்க வேண்டும்.

74 வருடங்கள் என்ன செய்தார்கள்?, 225 பேரும் என்ன செய்தார்கள் எனக் கேட்கின்றனர். 225 பேரில் இல்லாத வெளியில் இருந்து ஒருவரை ஜனாதிபதியாகக் பதவிக்கு கொண்டு வந்து இரண்டு வருடங்களில் வெளியேறுமாறு கோருகின்றனர். 225 பேருக்கு வெளியில் வியத் கம ஊடாக சிலரை நாடாளுமன்றத்துக்கும் கொண்டு வந்தனர். எங்கே சீதா அம்மையார், அவர் தற்போது நாடாளுமன்றத்துக்கும் வருவதில்லை.

காலத்திற்கு காலம் ஒவ்வொரு கோஷங்கள் வரும். 2010 ஆம் ஆண்டு படையினர் என்ற கோஷத்தை கொண்டு வந்தனர். 2019 ஆம் ஆண்டு வியத் கம என்ற கோஷத்தை கொண்டு வந்தனர். என்ன நடந்தது எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதனால், ஜனாதிபதியையும் ராஜபக்ஷவினரையும் வீட்டுக்கு செல்லுமாறும் கொள்ளையிட்ட பணத்தை திரும்ப வழங்குமாறுமே மக்கள் கோருகின்றனர் எனவும் எஸ்.எம். மரிக்கார் கூறியுள்ளார்.

# இலங்கை சமகால நிலைவரத்தை மிகைப்படுத்தும் இந்திய ஊடகங்கள்

## ஆதங்கம் வெளியிடுகின்றனர் இலங்கை மக்கள்

இலங்கையில் சமகால நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் இந்திய ஊடகங்கள் பல பொய்யான தகவல்களைப் பரப்பி, உலகளாவில் இலங்கைக்கு இருக்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக இலங்கை மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் கல்வி அறிவுள்ள மக்களை கொண்ட நாடுகளில் பட்டியலில் இலங்கை முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சர்வதேச ரீதியாக ஊடகங்கள் பல தகவல்களை வெளியிட்டு வருகின்றன. அதில் குறிப்பாக இந்திய ஊடகங்கள், இலங்கை தொடர்பில் உண்மைக்குப் புறம்பான பல போலியான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பலர் இவ்வாறு போலியான தகவல்களைப் பதிவிட்டு வருகின்றனர். இலங்கையில் மக்கள் மிகவும் வறுமையில் வாடுகின்றனர் எனவும் பட்டினியால் மக்கள் மரணமடைகின்றனர் எனவும், செய்திகள் வெளியிடப்படுகின்றன.

அடுத்த வேளை உணவு இல்லாமையால் அடுத்தவர்களின் உணவுகளைத் தட்டிப்பறித்து இலங்கை மக்கள் உண்கின்றனர் எனவும் பொய்யான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு இலங்கை மக்களின் மனங்களை புண்படுத்தி வருகின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளமை என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக யாரும் யாரிடமும் கையேந்தும் நிலையிலோ அல்லது தட்டிப்பறித்து உண்ணும் நிலைமையிலோ இல்லை. இங்கு எரிபொருள், எரிவாயு, சில அத்தியாவசியப் பொருள்களுக்காக பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் கொழும்பு உட்பட பல பிரதான நகரங்களில் பட்டினியால் யாரும் கஷ்டப்பட்டதில்லை. ஆனால் கிராமப்புறங்களில் மக்கள் சில நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளமை யதார்த்தமாகும்.

இவ்வாறான நிலையில் உண்மைத்தன்மைகளை அறியாது தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் பல யூரியூப் சனல்கள் பல போலியான தகவல்கள் வெளியிட்டு வருகின்றன. மிகவும் பிரபலமான யூரிப்பர் ஒருவர் இலங் கையில் பாண் ஒன்றின் விலை 2 ஆயிரம் ரூபா என செய்தி வெளியிட்டு வருகிறார். உண்மை அதுவெல்லவே.

அதில் சிலர், இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடம் உணவுகளை பறித்து உண்கின்றனர் எனவும், அவர்களிடம் பிச்சை கேட்கின்றனர் எனவும் மிகவும் கொச்சப்படுத்தும் வகையில் போலித் தகவல்களை வெளியிடுகின்றனர். இந்நிலையில் பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள் என்ற வகையில், நீங்கள் வருமானம் ஈட்டுவதற்காக உண்மைக்குப் புறம்பான போலியான தகவல்களை வெளியிட்டு மக்களை குழப்ப வேண்டாம் என பலரும் தமது ஆதங்கங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மீள முடியாதது என்பது ஒருபுறமிருக்க, மக்கள் சுற்றுலாப் பயணிகளிடம் பறித்து உண்ணும் அளவிற்கு தங்கள் சுயத்தை இழந்து விடவில்லை என்று சமூக வலைத்தளங்களில் இந்திய ஊடகங்களின் செயல்பாடுகளுக்கு இலங்கை மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

# அமைதியான முறைமையில் பதற்றத்தை கட்டுப்படுத்துக!

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் வலியுறுத்து



பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெறும் போராட்டங்களை அமைதியான முறையில் கட்டுப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களில் திடீர் தட்டுப்பாடு மற்றும் மோசமான பணவீக்கம், பண மதிப்பிழப்பு மற்றும் மின்வெட்டு போன்றவற்றால் நாட்டின் நிலைமை மோசமாகியுள்ளது.

இது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அடிப்படைப் பொருள்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களால் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் லிஸ் த்ரோசல் தெரிவித்துள்ளார்.

அவசரகால நிலை பிரகடனம், ஊரடங்கு உத்தரவு, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமை மற்றும் போராட்டக்காரர்கள் மீதான தேவையற்ற வன்முறைகள் தொடர்பாகவும் தமக்கு செய்திகள் கிடைத்தன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எதிர்ப்பு போராட்டம் அல்லது கருத்து சுதந்திரத்துக்கு எதிராக அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தற்போதைய நிலைமைகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அவசரகால சட்டம் அமுல்படுத்தல்; ஜனாதிபதியின் முடிவு சரியானது!

## தினேஷ் குணவர்தன வக்காலத்து

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஜனாதிபதியின் முடிவை அரசாங்கம் ஆதரித்தது என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய பொதுச்சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்தமையை அடுத்து, அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது எனக் கூறினார்,

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தும் வர்த்தமானியை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் ரத்துசெய்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2022இல் வெளியிடப்பெற்றது.